ISSN : 2456-821X **அவையம் 2 (1)** 2018 P.No. : 1-13

புதிய அவையம்



## *திருப்பத்தூர் வட்டாரத் தொல்லியல் களங்கள் (புதியவை –பகுதி:2)*

***முனைவர் ஆ.பிரபு***
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 15.04.2018** **ஏற்கப்பட்டது : 03.05.2018**

***த****மிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளான இலக்கியத் தரவுகள், சாசனங்கள், ஓவியங்கள், சுவடிகள், நாணயங்கள், வெளிநாட்டார் குறிப்புகள் எனப் பலதரப்பட்ட தரவுகள் இருந்தாலும் இவற்றில் முக்கிய இடம் வகிப்பது கல்வெட்டுகளும், நடுகற்களுமேயாகும். காலத்தால் அழியாது நிலைத்து நின்று உண்மையினை உரக்கச் சொல்லும் நம்பத்தகுந்த சான்றுகளாக இவை திகழ்கின்றன. அவ்வகையில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பல்வேறு காலகட்டங்களில் ஆய்வுகள் பல நிகழ்த்தி சான்றாதரங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இருப்பினும் அன்மைக்காலங்களில் எஞ்சியுள்ள பல தடயங்கள் இனங்காணப்பட்டு வருகின்றன. வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் சுற்றுவட்டாரத்தில் எண்ணற்ற தொல்லியல் சுவடுகள் நிறைந்திருப்பதனை கள ஆய்வுகள் வாயிலாக அறியமுடிகின்றது. இவை யாவும் இன்னும் பதிவு செய்யப்படாதவை என்பது*

புதிய அவையம்

சிறப்புக்குறியதாகும். அங்ஙனம் மேற்கொண்ட கள ஆய்வில் பெறப்பட்ட தொல்லியல் சுவடுகளை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

**வேடியப்பன் நகர் நடுகல் கோட்டம்**

திருப்பத்தூரிலிருந்து ஆலங்காயம் செல்லும் பெருவழிச் சாலையில் சுமார் 10 கிமீ தொலைவில் வேடியப்பன் நகரில் ஒரே இடத்தில் 6 நடுகற்கள் அமைந்துள்ள நடுகல் கோட்டம் கடந்த ஆண்டு கண்டறியப்பட்டது. பொதுவாகத் தமிழகத்தின் வட மாவட்டங்களில் நடுகற்களை வேடி வட்டம், வேடியப்பன் கல், வேடிக் கல், வேடர் கல் என்று அழைக்கின்றனர். வேட்டையாடுபவரைக் குறிக்கும் வேடர், வேட்டுவர் என்ற சொற்களின் திரிபே வேடி என்ற சொல்லாக வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வகையில் வேடியப்பன் நகர் எனும் இச்சிற்றூரின் எல்லையில் பழமையான அழிஞ்சி மரங்கள் சூழ்ந்த பகுதியில் இந்நடுகல் கோட்டம் அமைந்துள்ளது. இங்கு மொத்தமாக 6 நடுகற்களும் சிறப்பற்ற ஒரு கல்லும் இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு நடுகல்லிலும் வீரர்களது உருவங்கள் செவ்வனே வடிக்கப்பட்டுள்ளன. வீரர்களின் ஒரு கையில் வில்லும் மறு கையில் அம்பும் இடம்பெற்றுள்ளது. வில்லில் இருந்து அம்பினைச் செலுத்தும் காட்சி மிகச் சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளது. இவ்வட்டார மக்கள் இக்கற்களை வேடியப்பன் என்றே அழைக்கின்றனர். விழாக்காலங்களில் ஆடு,கோழிகளைப் பலியிட்டு வணங்குகின்றனர்.



*(வேடியப்பன் நகர் நடுகல் கோட்டம்)*



*(வேடியப்பன் நகர் அருகில் உள்ள ஏனைய நடுகற்கள்)*

ஒரு வீரனின் முதுகில் அம்பாறாத்தூணி (அம்புக் கூடு) இடம்பெற்றுள்ளது. அனைவரும் கொண்டை வைத்துள்ளனர். கழுத்தில் அணிகலனும், கைகளில் பூணும் அணிந்துள்ளனர். இரண்டு வீரர்களது உருவங்கள் முருக்கு மீசையுடன் வடிக்கப்பட்டுள்ளன. வீரர்கள் அனைவரது இடையிலும் சிறிய கத்தியும் இடைக்கச்சும் காணப்படுகின்றது. இங்குள்ள நடுகற்களில் 5கற்கள் பெரிய அளவில் வடிக்கப்பட்டுள்ளன. ஒன்று மட்டும் சிறிய அளவில் உள்ளது.

இந்நடுகற்கள் அனைத்தும் ஒரே இடத்திலிருந்து எடுக்கப்பட்ட கருங்கற்களால் வடிக்கப்பட்டுள்ளன. அடர்த்தியான நிழல் தரும் பழமையான அழிஞ்சி மரங்கள் சுற்றிலும் இருக்க நடுவில் இந்நடுகற்கள் உள்ளன. இந்நடுகற்களைக் கொண்டே இவ்விடத்திற்கு வேடியப்பன் நகர் என்று பெயர் வந்திருக்கக்கூடும். இவ்விடத்திற்குச் சற்றுத் தொலைவில் கல்வீட்டமைப்புடன் கூடிய நடுகல் ஒன்றும் உள்ளது. இதில் நின்ற நிலையில் வலது கரத்தில் வாளுடனும் இடது கரத்தில் வில்லும் முதுகில் அம்புக்கூடுமாக வீரன் வடிக்கப்பட்டுள்ளான். இவ்விடத்திலிருந்து வடமேற்கில் ஆற்றங்கரையோரத்தில் இரண்டு நடுகற்கள் உள்ளன. இவை

*மண்ணுக்குள் புதைந்த நிலையில் காணப்படுகின்றன. இந்நடுகற்கள் யாவும் ஊரைக்காக்கும் பொருட்டு ஏற்பட்ட போரில் உயிர் துறந்த வீரர்களுக்காக அவர்கள் மடிந்த இடங்களில் எடுக்கப்பட்ட நடுகற்களாகும். இவை விஜயநகரப் பேரரசின் ஆட்சிக் காலமான கி.பி.16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கக் கூடும்.*

***கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'ஒட்டன் கல்' எனும் நடுகல்***

*திருப்பத்தூரிலிருந்து 10கி.மீ தொலைவிலுள்ள கொண்டப்பநாயக்கன்பட்டி சுற்றுவட்டாறப் பகுதியில்* ***மேற்கொண்ட கள ஆய்வில்*** *கொண்டப்பநாயக்கன் பட்டி ஊர் நுழைவுப் பகுதியில் நடுகல் ஒன்று கண்டறியப்பட்டது. இந்நடுகல்லானது 3மீட்டர் அகலமும் தரைக்கு மேலே 3மீட்டர் உயரமும் கொண்டதாக உள்ளது. வீரர்கள் இருவர் அருகருகில் நின்று ஆயுதங்களோடு மோதிக் கொள்ளும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. அதில் இருவரது இடையிலும் குறுவாள் இடம்பெற்றுள்ளது. ஒரு வீரனின் வலது கரத்தில் வில்லினை ஏந்தியுள்ளான். இவனை மறுபுறம் உள்ள வீரன் தமது வலக்கரத்தில் வைத்துள்ள ஆயுதத்தால் தாக்குகிறான். இவ்வாயுதம் பார்ப்பதற்கு மண்வெட்டி போலவும் உள்ளது. இடப்புறக் கையில் 'கட்டரி' எனும் சிறப்பு ஆயுதத்தினையும் வைத்துள்ளான். இருவரும் சிறிய அளவிலான கொண்டை வைத்துள்ளனர். கைகளில் பூண் அணிந்துள்ளனர்.*




*(ஒட்டன் கல் மற்றும் அருகிலுள்ள கல்வெட்டு)*

பழைமையான பெரிய அரசமரத்தினடியில் இருக்கும் இந்நடுகல்லானது மிகச் சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள் இக்கல்லினை 'ஒட்டன் கல்' என்று அழைக்கின்றனர். பொதுவாக நடுகல்லினை மக்கள் வழிபடும் மரபு இருப்பதை நாம் அறிவோம். இந்நடுகல்லினை இப்பகுதி மக்கள் வழிபடுவதில்லை. விஜயநகரப் பேரரசுக் காலத்தில் போயர் என்னும் இனக்குழு மக்கள் தமிழகப் பகுதியில் குடியேறினர். இப்போயர் இனத்தின் கிளைப் பிரிவே ஒட்டர் எனும் இனக்குழுவினர். இவர்கள் கல்லுடைக்கும் தொழிலை மேற்கொண்டவர்கள். இப்பகுதியில் ஒட்டர் இன மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கு இந்நடுகல் சான்றாகத் திகழ்கிறது. அக்காலத்தில் ஏற்பட்ட மோதலில் இன்னுயிர் நீத்த வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லாக இதனைக் கொள்ளலாம். நாயக்க மன்னர்களின் குல தெய்வமான சென்ன கேசவப் பெருமாள் கோவில் இவ்வூரில் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நடுகல் கி.பி.15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது. இந்நடுகல் இருக்கும் இடத்திற்கு சற்று தொலைவில் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. அக்கல்வெட்டு சிதைந்த நிலையில் ஒன்றிரண்டு எழுத்துக்கள் மட்டுமே அடையாளம் காணத்தக்க நிலையில் உள்ளது. இக்கல்லினை 'நாட்டுக் கல்' என இப்பகுதி மக்கள் அழைக்கின்றனர். இக்கல்வெட்டை இவ்வூர் மக்கள் வழிபடுகின்றனர். இது குறித்து மேலும் ஆய்வு செய்து வருகிறோம். என்று கூறினர்.

**கற்திட்டை அமைப்புடன் கூடிய நடுகல்**

திருப்பத்தூரில் இருந்து 16 கி.மீ தொலைவில் உள்ள வெலக்கல் நத்தம் சுற்றுவட்டாரப் பகுதியில் நிகழ்த்தப்பட்ட கள ஆய்வில் நந்திபெண்டா என்னும் சிற்றூரில் கற்திட்டை அமைப்புடன் கூடிய நடுகல் கண்டறியப்பட்டது. இங்கு அமைக்கப்பட்டுள்ள நடுகல்லானது 5அடி உயரமும் 6அடி அகலமும் கொண்ட நான்கு பலகைக் கற்களால் அமைக்கப்பட்ட கற்திட்டையினுள் அமைக்கப்பட்டுள்ளது. நடுகல் இடம்பெற்றுள்ள பலகைக் கல்லில் வீரன்

பதிப்பு இலவசம்

ஒருவன் தன் வலது கையில் வாளும் இடது கையில் வில்லும் ஏந்தியவாறு உள்ளான். அவனது நெற்றியில் திலகமாகப் பிறைக்குறி காணப்படுகிறது. கழுத்திலும் கைகளிலும் அணிகலன்களை அணிந்துள்ளான். இடையில் கச்சையும் அதனோடு சிறு கத்தியும் வைத்துள்ளான். அருகில் வீரன் உயிர்நீத்தவுடன் அவனோடு தன் உயிரையும் மாய்த்துக் கொண்ட பெண்ணுருவமும் இடம்பெற்றுள்ளது. அப்பெண் அவனது மனைவியாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.



*(கற்திட்டையின் மேற்புறம் வீரனின் உருவம் )*





*(நந்திபெண்டாவில் உள்ள கற்திட்டை மற்றும் நடுகல்)*

இந்நடுகல்லின் சிறப்பம்சம் என்னவென்றால், நடுகல் அமைக்கப்பட்டுள்ள கற்திட்டையின் மேற்புறக் கூரையாக விளங்கக்கூடிய பலகைக் கல்லின் மேற்புறம் வீரனது உருவம் கம்பீரமான தோற்றத்தோடு கோட்டுருவமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அதில் வீரன் வலது கையில் வாளும் இடதுகையில் வில்லுடனும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளான். இது பக்கவாட்டில் இருந்து பார்க்கக் கூடியதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது மேலும் சிறப்பாகும்.

தொடர்ந்து அந்நடுகல் குறித்து அவ்வூர் மக்களிடம் கேட்டறிந்தபோது; இந்நடுகல்லினை இவ்வூரார் படவீட்டம்மன் என்கின்றனர். அதாவது படைவீட்டம்மன் என்ற பெயர்தான் காலப்போக்கில் மருவி படவீட்டம்மன் என்றாகியுள்ளது. இப்பெயரினையும் இந்கல்லின் அமைப்பினையும் பார்க்கும்போது போரில் மடிந்த வீரனுக்காக எடுக்கப்பட்ட நடுகல் இதுவாகும். செதுக்கப்பட்டுள்ள உருவ அமைப்பினைப் பார்க்கும்போது இக்கல் 14 அல்லது 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க வாய்ப்புள்ளது. இக்கல் அங்குள்ள பட்டாளம்மன் கோவில் வளாகத்தில் உள்ளது. இவ்வளாகத்தில் மேலுமொரு முக்கோணவடிவக் கல் நடப்பட்டுள்ளது. அதனைக் **'கோ' கல்** என்றழைக்கின்றனர். இக்கல் ஒருகாலத்தில் இறந்த கோவில் பசுவின் நினைவாக வைக்கப்பட்டுள்ளதாக இவ்வூரிலுள்ள முதியவர்கள் கூறுகின்றனர். இந்நடுகல் மற்றும் 'கோ' கல் இப்பகுதியின் வரலாற்றுப் பின்புலத்தினை எடுத்துக் கூறுவதாக உள்ளது .

**சந்திரபுரம் நடுகள் கோட்டம்**

திருப்பத்தூரில் இருந்து 10 கி.மீ தொலைவில் உள்ளது சந்திரபுரம் எனும் சிற்றூர். இப்பகுதியில் உள்ள மலைக்குன்றில் ஏற்கனவே கற்கால மனிதர்களின் குகை ஓவியங்களைத் தொல்லியல் அறிஞர் திரு ராஜன் குழுவினர் கண்டறிந்துள்ளனர். இப்பகுதியில் மேற்கொண்ட களப்பணியில் இங்குள்ள ஏரியின் தென்புறம் ஏரிக்கோடி எனும் சிற்றூரில் ஜெய்குமார் என்பருக்குச் சொந்தமான விவசாய நிலத்தில் மிகப்பெரிய நடுகல் கோட்டம் இருப்பதை

காணமுடிந்தது. ஏரிக்கோடி என்ற இடத்தில் உள்ள இந்த நடுகல் கோட்டமானது தமிழகத்தில் இதுவரை கண்டறியப்பட்ட சிறந்த நடுகற்களின் வரிசையில் இதுவும் ஒன்றாகத் திகழ்கின்றது. இந்நடுகல்லானது சுமார் 10 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்டதாக உள்ளது.

நடுகல் மிக நேர்த்தியான சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தமாக எட்டு நிகழ்வுகளை சுட்டும் விதமாக 25 மனித உருவங்களும், 5 குதிரைகளும் வடிக்கப்பட்டுள்ளன. கல்லின் மையத்தில் தலைவனின் உருவம் பெரியதாக வடிக்கப்பட்டுள்ளது. அவன் கொண்டை வைத்துள்ளான். இடையில் கச்சையுடன் வாளின் உறை இடம்பெற்றுள்ளது. கழுத்தில் இரண்டு சங்கிலிகளையும் கால்களில் வீரக்கழலும்; கைகளில் மணிக்கட்டிலும் அதற்குச் சற்று மேலும் பூண் அணிந்துள்ளான். நீண்ட காதுகளில் காதணியும் அணிந்துள்ளான். போர்க்களத்தில் எவ்வாறு இறந்தான் என்பதும் இந்நடுகல்லில் விவரிக்கப்பட்டுள்ளது.



(சிதைந்த நிலையில் அங்கு காணப்படும் கல்வெட்டு)



*(சந்திரபுரம் நடுகல் கோட்டம்)*



*தலைவனின் தலையில் ஒரு அம்பும், மார்பில் நெஞ்சுப் பகுதியில் ஒரு அம்பும் வலது காலில் ஒரு அம்பும் பாய்ந்த வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. இடதுபுறத்தில் இருந்து பாய்ந்து வீரனின் உடலைத் துளைக்கும் இவ்அம்புகள் ஒவ்வொன்றும் படிநிலைகளில் அமைந்துள்ளன. அதாவது தலை மற்றும் மார்பில் பாய்ந்த அம்புகள் உடலின் உள்ளே பாய்ந்த நிலையில் வலது காலில் பாய்ந்த அம்பானது காலைத் துளைத்து வெளிவந்த வண்ணம் அமைக்கப்பட்டது நடுகல்லிலிலும் சிற்பக்கலை நுட்பத்தினைக் காட்டுகிறது. தலைவனின்*

வலது கரத்தில் பெரிய போர்வாளினை ஏந்தியுள்ளான். கல்லின் வலதுபுறத்தில் மேற்புறம் நான்கு குதிரைகள் வரிசையாக உள்ளன. அதற்குக் கீழே காவடியும் சாமரமும் வீசக்கூடிய இரண்டு பெண்கள்; அதற்குக் கீழே பல்லக்குத் தூக்கியவாறு இரண்டு ஆண்கள்; அதற்குக் கீழே குடைகள் ஏந்தியவாறு மூன்று பெண்களும் அருகில் வீரனது குதிரையும் உள்ளன.

கல்லின் இடதுபுறத்தில் அமர்ந்த நிலையில் ஒரு ஆணும் பக்கவாட்டில் இரண்டு பெண்கள் சாமரம் வீசும் நிலையிலும்; அதற்குக் கீழே கைகளில் வில்லுடன் எதிரெதிராகப் போரிடும் வீரர்களின் உருவங்களும் இடம்பெற்றுள்ளன. இறுதியாக விறலியரின் சிற்பங்களும் உள்ளன. அதாவது, நான்கு பெண்கள் காற்றுக் கருவிகளை வாயில் வைத்து இசைக்கின்றனர். கீழே நான்கு பெண்கள் நிற்கின்றனர். அவர்களில் மூவர் தோல் கருவிகளை வாசிக்கின்றனர். ஒருவர் உலோக இசைத்தட்டினைக் கையில் ஏந்தியபடி உள்ளார்.

நடுகல்லின் பக்கவாட்டில் சுவர் அரண் போல் கற்பலகைகளை நட்டு வைத்துள்ளனர். அதில் இடப்புறம் உள்ள கல் உடைந்து கீழே கிடக்கின்றது. அக்கல்லில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துக்கள் யாவும் சிதைந்த நிலையில் வாசிக்க இயலாவண்ணம் உள்ளன. அவ்வெழுத்துக்களின் அமைப்பை நோக்குகையில் கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க வாய்ப்புள்ளது. இதற்கு நேரெதிராக இன்னொரு நடுகல்லும் இடம்பெற்றுள்ளது. அதில் வீரனொருவன் கையில் வாளுடன் வடிக்கப்பட்டுள்ளான். அவனது வயிற்றுப் பகுதியில் அம்பு பாய்ந்துள்ளது. இந்நடுகல் தலைவனின் தளபதிக்கு எடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

இந்நடுகல் கோட்டத்தினைச் சுற்றி நான்கு மூலையிலும் பூவரச மரங்கள் உள்ளன. அம்மரங்களிம் வேர்கள் வெளிப்புறமாகப் பிண்ணி ஒரு அடித்தளம் போல மிக அழகாகக் காட்சிதருகின்றன. இந்நடுகல் கோட்டம் இப்பகுதியில் நேர்ந்த போரில் வெற்றியினைத் தேடித்தந்து மறைந்த தலைவன் மற்றும் அவனது படைத்தளபதிக்காக எடுக்கப்பட்டவையாகும். தலைவனது வீரத்தினைச் சிறப்பித்துப் போற்றும் நிகழ்வுகளை



புதிய இணையம்

உள்ளடக்கிய மிகப்பிரம்மாண்டமான நடுகல் கோட்டமாக இது திகழ்கின்றது. கோடியூரப்பன், முனீஸ்வரன் என்று இக்கோட்டத்தினை இப்பகுதி மக்கள் அழைக்கின்றனர்.

**சல்லியூர் வீரமங்கை நடுகல்**

சல்லியூருக்கு மேற்கே மானவள்ளி பஞ்சாயத்திற்குட்பட்ட தனியார் விவசாய நிலத்தில் மண்ணில் புதையுண்ட நிலையில் இருந்த நடுகல் ஒன்று அப்பகுதியில் மேற்கொண்ட கள ஆய்வின் வாயிலாகக் கண்டறியப்பட்டது. இதுகுறித்து சல்லியூர் பொதுமக்களிடையே முதற்கண் எடுத்துரைக்கப்பட்டது. பொதுவாக இதுபோன்ற கள ஆய்வுகளில் தகவல் பெறுவதும் நடுகற்களை முறையாக ஆராய்வதும் சவாலான ஒன்றுதான். பெரும்பாலும் நடுகற்கள் தொடர்பான செய்திகளை கூற மறுப்பதும், அக்கற்களை தொட்டோ, கழுவியோ பார்ப்பதற்கு அனுமதி மறுப்பதும் வாடிக்கை, காரணம், மக்களிடையே நிலவுகின்ற நம்பிக்கைகள் மற்றும் அச்ச உணர்வுகள். இவ்வூரில் நடுகற்கள் குறித்த உண்மைகளை உள்வாங்கிக்கொண்ட சல்லியூர் இளைஞர்களின் ஒத்துழைப்போடு மண்ணில் புதையுண்ட நடுகல் அகழ்ந்தெடுக்கப்பட்டது. இந்நடுகல்லானது ஒரு வீரப்பெண்ணுக்கு எடுக்கப்பட்டதாகும். நடுகல்லில் காணப்படும் வீரமங்கை இடது கையில் வில்லும் வலது கையில் அம்பும் ஏந்திய நிலையில் காணப்படுகிறார். இடையில் கச்சையுடன் சிறிய கத்தியினை வைத்துள்ளார். போர்புரிகையில் அணியும் ஆடையினை இவர் அணிந்துள்ளார். காலில் வீரக்கழல் காணப்படுகிறது. கழுத்தில் ஆபரணமும் காதில் வளையமும், தலையில் தனது நீண்ட கூந்தலை முடிந்து பெரிய கொண்டையாகவும் முடித்துள்ளார்.

இச்சிற்பமானது கல்லைக் குடைந்து செதுக்கப்பட்டுள்ளது. இந்நடுகல்லின் சிற்ப வேலைபாடுகள் மற்றும் தோற்ற அமைப்பு, இவ்வட்டார வரலாற்றுப் பின்புலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இவ்வீரமங்கை நடுகல் 12ஆம் நூற்றாண்டையொட்டிய பிற்காலச் சோழர்காலத்தைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும்.

பழைய இலக்கியம்

இந்நடுகல் இப்பகுதியில் நடைபெற்ற போரில் தம் பகுதியை மீட்கப் போர் புரிந்து வீரமரணம் அடைந்த பெண்ணுக்காக எடுக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. தவிர கொள்ளையர்களிடம் இருந்து தம் ஊரினைக் காக்கப் போரிட்டு வீரமரணம் அடைந்த பெண்ணின் நினைவைப் போற்றுவதற்காகவும் எடுக்கப்பட்டிருக்கலாம். தமிழகத்தில் இதுவரை கிடைக்கப்பட்ட நடுகற்களில் பெண்களுக்கென எடுக்கப்பட்ட நடுகற்கள் எண்ணிக்கையில் குறைவேயாகும். அவ்வகையில் இந்நடுகல் பெண்ணுக்கென எடுக்கப்பட்ட சிறப்பான நடுகற்களின் வரிசையில் முக்கிய இடம் பெறுகிறது. அக்காலத்தைய பெண்களது வீரத்தினைப் பறைசாற்றும் விதத்தில் இந்நடுகல் காணப்படுகிறது. இக்கல் 5.1/2 அடி நீளமும், 4 அடி அகலமும் கொண்டதாக உள்ளது.




*(சல்லியூர் நடுகல்)*



ஒரு காலத்தில் மிகப்பெரிய வேப்பமரத்தின் அடியில் நடப்பட்டிருந்த இந்நடுகல்; நாளடைவில் மரம் வெட்டப்பட்ட நிலையில் கல் சிதையத்தொடங்கியுள்ளது. இவ்வூர் மக்கள் இக்கல்லின் மீது கொண்டிருந்த ஒருவித அச்சத்தினால் இதனைக் கண்டுகொள்ளாது விட்டுவிட்டனர். பின்னர் மண்ணில் புதைந்து கேட்பாரற்றுக் கிடந்துள்ளது. இந்நடுகல் இருக்கும் இடத்திற்கு மிக அருகே பட்டாளத்தம்மன் என்ற கோவில் உள்ளது. சிலைவழிபாடற்ற அக்கோவிலும் மக்களது பயன்பாடு இன்றியே உள்ளது. காரணம், அக்கோவில் குறித்துக் கூறப்படும் அச்சம் தரும் கட்டுக் கதைகளேயாகும். ‘பட்டாளம்’ என்பது படையினைக் குறிக்கும் சொல்லாகும். இவ்வீரமங்கை நடுகல்லுக்கும் இக்கோவிலுக்கும் இருக்கும் தொடர்பினை இதன் வாயிலாக அறியலாம். அவ்வூர் மக்களுக்கு இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, இது ஒரு நடுகல் என்பதையும் நடுகற்கள் குறித்த வரலாறுகளையும் எடுத்துரைத்து இக்கலின் மீது அவர்களுக்கு இருந்த அச்சத்தினைப் போக்கி இதனை முறைப்படி பாதுகாக்க அவர்களிடம் வலியுறுத்தப்பட்டது.